**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2026ம் ஆண்டு ஜீலை மாதம் 20–ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.1–ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படிதிரு.G.அசோக்பிரசாத் B.A.B.L., M.S.E.N., ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(வாதி ஆஜர் . 2 மற்றும் 4ம்பிரதிவாதிகள் ஆஜர் இல்லை. வாதி மற்றும் 2 மற்றும் 4ம் பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்)

அ.வ.எண்.942/2022

வா.சா.1 லல்லி க/பெ பாலசுப்பிரமணியன்

<u>2ம் பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை :–</u>

1. இந்த வழக்கு பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்துள்ளேன். நானும், 1,2பிரதிவாதிகள் அனைவரும் சகோதரர்கள் என்றால் சரிதான். நான் Phd வரை படித்துள்ளேன். என்னுடைய தந்தை ஈரோட்டில் உள்ள Hand looms அரசு கைத்தறி நிறுவனத்தில் துணைஇயக்குநராக பணிபுரிந்து வந்தார். 10.07.2021 தேதியில் என்னுடைய தந்தை இறந்துவிட்டார். 2004ல் பாலசுப்பிரமணியத்தை காதலித்து திருமணம் செய்து கொண்டேன் என்றால் சரிதான்.

2. திருமணத்திற்க்கு பிறகு சென்னையில் வசித்து வந்தேன். குருஸ்ரீசாந்திவிஜய்ஜெயின்காலேஜ்ல் அசிஸ்டன் புரோபசர்ராக பணிபுரிந்து வந்தேன். அதன்பிறகு காரைக்குடியில் அழகப்பாக பல்கலைகழகத்தில் அசிஸ்டன் புரோபசர்ராக பணிபுரிந்து வந்தேன். 2006ல் இருந்து தற்போத வரை திருச்சி பாரதிதாசன் பல்கலைகழத்தில் துணைபேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். 03.04.1970, என்னுடைய தாத்தா மாயாண்டி என்கிற மாசிலாமணி தாவா 2வது அயிட்ட சொத்தை கிரையம் பெற்று அதன் தனிப்பட் சுவாதீன அனுபவத்தில் இருந்து வந்தார் என்றால் சரிதான்.

3. என்னுடைய தாத்தா இறந்த பிறகு மேற்கண்ட சொத்தை யார் அனுபவித்து வந்தார் என்றால் என்னுடைய பாட்டி அனுபவித்து வந்தார். என்னுடைய பாட்டி இறந்த பிறகு என்னுடைய அப்பா மணி, சித்தப்பா முருகையா மற்றும் அத்தை ராஜம்மாள் ஆகியோர் அனுபவித்து வந்தார்கள். என்னுடைய தாயார் பாரதமாதா கிரையம் வாங்கியது எந்த வருடம் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அந்த சொத்து எங்கு அமைந்துள்ளது என்றால் கருமடையூர் கிராமம், தென்காசி மாவட்டத்தில் அமைந்துள்ளது.

4. மேற்படி சொத்தின் விஸ்தீரணம் 33 ஏர்ஸ் ஆகும். என்னுடைய பாட்டி உமயாண்டாள் பெயரில் எவ்வளவு சொத்து பாத்தியம் என்றால் எனக்கு தெரியாது. 2004ல் நான் காதல் திருமணம் செய்த பிறகு என் குடும்பத்தாரோடு கருத்து வேறுபாடு இருந்தது என்றால் 3 மாதம் வரை என் குடும்பத்தாரோடு கருத்து வேறுபாடு இருந்தது அதன்பிறகு அனைவரும் சேர்ந்துவிட்டோம்.

2ம்பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.